பிரித்தானிய தமிழ் மொழிப் பரீட்சைச் சபை

British Tamil Examination Board (BTEB)

www. bteb.org.uk

# தமிழ் – கேட்டல் பரீட்சை

## Tamil - Listening Test

## தரம் (Grade) : 01/02/03

Version A

# Recording Notes

## PART - I

1. நல்ல இசையை நான் காதால் கேட்டுக் கொண்டிருக்கிறேன்.
2. எனக்கு வாழைப்பழம் மிகவும் பிடிக்கும்.
3. எனது ஐந்தாவது பிறந்த நாளுக்கு அப்பா ஓர் அழகிய கேக் வாங்கித் தந்தார்.
4. எனது இரண்டு கைகளிலும் நிறைய பலூன்கள் இருக்கின்றன.
5. எனக்கு நண்டு மிகவும் பிடித்தமான கடலுணவு.

## PART 2

விபுல் : Hello வேணி. உனக்கு வதனியைத் தெரியுமா?

வேணி : ஆம் தெரியும். அவளுடைய சகோதரன் கண்ணாடி அணிந்திருப்பான் இல்லையா?

விபுல் : ஆம்

வேணி : அவனுக்கென்ன

விபுல் : அவன் நாளைக்கு இலங்கைக்குச் செல்கிறான்.

வேணி : அப்படியா எத்தனை மணிக்கு விமானத்தில் புறப்படுகின்றான்?

விபுல் : காலை 9 மணி Air Lanka விமானத்தில் புறப்படுகின்றான்.

வேணி : தனியாகவா செல்லுகின்றான்?

விபுல் : இல்லை. அவன் தனது தாயாருடனும் தம்பியுடனும் செல்கின்றான்.

வேணி : அவனை உனக்கு எப்படித் தெரியும்?

விபுல் : அவனும் நானும் ஒன்றாகப் பாடசாலையில் படித்தோம்.

வேணி : அவன் எப்படியானவன்?

விபுல் : அவன் மிகுந்த கடவுள் பக்தி உடையவன். எப்போதும் இறைவழிபாடு செய்வான்.

## PART 3

Suruthi : காந்தன் உனது பாடசாலை நண்பர்களைப்பற்றிச் சொல்லுங்களேன்.

Kanthan : ஆம் சுருதி கூறுகின்றேன். எனது நண்பன் குமரன். அவனுக்கு எப்போதும் நீரில் விளையாடப்பிடிக்கும்.

Suruthi : அப்படியா?

Kanthan : ஆம். அடுத்து எனது நண்பி ரிஷிகா. அவளுக்கு சினிமாவுக்கு சென்று படம் பார்ப்பதில் ஓர் அலாதிப் பிரியம்.

Suruthi : ஓ! அவள் தொலைக்காட்சி பார்ப்பதில்லையா?

Kanthan : இல்லை. ரிஷிகாவின் தம்பி மேனன் எப்போதும் தொலைக் காட்சியைப் பார்ப்பான்.

Suruthi : வேறு யாரெல்லாம் உங்களுக்குப் பிடித்த நண்பர்கள்?

Kanthan : அருணன் என்னுடன் எப்போதும் கண்ணாம் பூச்சி விளையாட்டு விளையாடுவான். அவனுக்கு அது மிகவும் பிடித்த விளையாட்டு.

Suruthi : ஓ அது எனக்கும் பிடிக்கும். வேறு யாரை உங்களுக்குப் பிடிக்கும்?

Kanthan : அருணனின் குட்டித்தம்பி சிவா. அவன் முதலாம் ஆண்டில் படிக்கிறான். அவன் வீட்டில் எப்போதும் தனது நாய்க் குட்டியுடன் விளையாடுவான்.

## GRADE: 1/ 2/ 3

## PART - 4

16) நான் இலண்டனில் இருந்து பரிசுக்குப் போகும்போது Train இல் பயணம் செய்தேன். அது மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது.

17) அது மிகவும் விரைவாக இரண்டே கால் மணி நேரத்தில் போய்சேர்ந்தது. அதனால் பரிசுக்கு பயணம் செய்த களைப்பு தெரியவில்லை.

18) பரிசில் உள்ள ஐபிள் கோபுரம், இரண்டாம் உலக யுத்தத்தில் பயன்படுத்திய கழிவு இரும்புகளால் உருவாக்கப்பட்ட உலகப் பிரசித்தி பெற்ற ஓர் கோபுரமாகும்

19) Paris சிறுவர்களுக்கு மிகவும் பிடித்த இடம் டிஸ்னி Land ஆகும். இங்கு உள்ள நிகழ்ச்சிகளுக்கு Mickey Mouse நடனம் முக்கியமானது. இது Elephant நடனத்தைவிடச் சிறப்பானது என சிலர் கூறுவர்.

20) Paris ல் இருந்து சித்தப்பாவின் காரில் இலண்டனுக்கு வந்தபோது கடலைக் கடக்கும் மிதவைக் கப்பலில் பயணம் செய்தது எனக்கு ஓர் புது அனுபவமாக இருந்தது.

## GRADE: 1/ 2/ 3

## PART - 5

21) Guna உங்கள் புதிய கார் எப்படிப்பட்டது?
அது மிகவும் சொகுசாக பயணம் செய்யக் கூடியது.

22) - இன்று நீங்கள் பாடசாலைக்குச் செல்கின்றீர்களா?
- ஆம் சாந்தி. உனக்கு இன்று என்ன பரீட்சை இருந்தது?
- ஆம். தமிழ்மொழிப் பரீட்சை

23) Ravi நீங்கள் தந்த CD யில் உள்ள பாட்டுக்களில் மிகவும் நல்ல பக்திப் பாடல்கள் உள்ளன.
Ravi - ஆம் அவை எல்லாம் எனக்கு பிடித்த பாடல்கள்.

24) சந்திரன் உங்கள் விடுமுறைக்கு எங்கு செல்கிறீர்கள்?
நான் என் விடுமுறையை குடும்பத்தாருடன் கழிக்கப் போகின்றேன்.

25) இந்தப் படம் நன்றாக வரையப்பட்டுள்ளது. யார் இதை வரைந்தார்கள்?
இது ஜெயாவினால் வரையப்பட்டது